# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6
# மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் –2025
# வணிகவியல் – விடைக்குறிப்புகள்

**மொத்த மதிப்பெண்கள்– 90**

<u>குறிப்பு–</u>

1. நீலம் அல்லது கருப்பு நிற மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.
2. பகுதி அ–ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் கருத்துக்களை தெளிவாக எழுதியிருந்தால் முழு மதிப்பெண் வழங்கவும்.

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **20×1=20**

| TYPE A | | | TYPE B | | |
|---|---|---|---|---|---|
| 1 | அ | மோடம் | 1 | ஆ | நிதிகளை திரட்டுவதற்கு |
| 2 | ஆ | நிதிகளை திரட்டுவதற்கு | 2 | ஆ | வணிக வங்கி |
| 3 | அ | திட்டமிடுதல் | 3 | ஆ | பரஸ்பர நிதிகள் |
| 4 | ஈ | மும்பை | 4 | இ | மாவட்ட நீதிபதி |
| 5 | ஆ | பரஸ்பர நிதிகள் | 5 | அ | கலை மற்றும் அறிவியல் |
| 6 | ஈ | 1992 | 6 | ஈ | கரடி |
| 7 | அ | ரால்ப் நாடர் | 7 | ஈ | புற வளங்கள் |
| 8 | அ | வணிக இரசீது சந்தை | 8 | ஈ | ஜார்ஜ் ஓடியோர்ன் |
| 9 | ஈ | சரக்கு மற்றும் சேவை வரி | 9 | ஈ | மும்பை |
| 10 | இ | மாவட்ட நீதிபதி | 10 | அ | ரால்ப் நாடர் |
| 11 | அ | தொழிற்சாலைக்கு வெளியே | 11 | அ | ஜீலை 2015 |
| 12 | அ | கலை மற்றும் அறிவியல் | 12 | இ | தயாரிப்பு |
| 13 | இ | தயாரிப்பு | 13 | ஈ | சரக்கு மற்றும் சேவை வரி |
| 14 | ஆ | வாடிக்கையாளர் | 14 | அ | தொழிற்சாலைக்கு வெளியே |
| 15 | ஆ | வணிக வங்கி | 15 | அ | மோடம் |
| 16 | ஆ | பரவலான / ஊடுருவலான | 16 | அ | திட்டமிடுதல் |
| 17 | அ | ஜீலை 2015 | 17 | ஆ | பரவலான / ஊடுருவலான |
| 18 | ஈ | கரடி | 18 | அ | வணிக இரசீது சந்தை |
| 19 | ஈ | ஜார்ஜ் ஓடியோர்ன் | 19 | ஈ | 1992 |
| 20 | ஈ | புற வளங்கள் | 20 | ஆ | வாடிக்கையாளர் |

## பகுதி – II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**

**வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 21 | **செயலூக்கமளித்தல்**<br>• ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பது<br>• பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பது<br>• ஒரு பணியை முடிக்க பணம் மற்றும் பணம் சாராத ஊக்குவிப்புகளை வழங்குவது.<br>**(வேறு தொடர்புடைய விளக்கத்திற்கு மதிப்பெண் வழங்கவும்)**<br>**(ஏதேனும் இரண்டு )** | 2 |
| 22 | **OTCEI**<br>பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டது (OTCEI) ஆகும். | 2 |
| 23 | **துணைத் தரகர்**<br>இவர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராக செயல்படுவார். அதற்கான கழிவைப் பெறுவார். | 2 |
| 24 | **மனித வள மேலாண்மை**<br>• மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.<br>• மனித வள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.<br>**(வேறு தொடர்புடைய விளக்கத்திற்கு மதிப்பெண் வழங்கவும்)**<br>**(ஏதேனும் ஒன்று)** | 2 |
| 25 | **தரப்படுத்துதல்**<br>தரப்படுத்துதல் என்பது பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பதாகும். | 2 |
| 26 | **கலப்படம்**<br>கலப்படம் என்பது உணவு பொருட்களில் விரும்பத்தகாத பதிலி பொருட்களை சேர்ப்பதாகும்.<br>**(எடுத்துக்காட்டுகள் இரண்டு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கவும்.)** | 2 |

| | | |
|---|---|---|
| 27 | மாவட்ட மன்றம்<br>• **1986** ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு **9**ன் படி நுகர்வோர் நலனை பாதுகாக்க மாவட்ட அளவில் செயல்படும் அமைப்பு ஆகும்.<br>**(வேறு தொடர்புடைய விளக்கத்திற்கு மதிப்பெண் வழங்கவும்)** | 2 |
| 28 | வருநிகழ்வுசார் சரக்கு<br>1) இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும்.<br>2) இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியை பொறுத்தது.<br>**(ஏதேனும் ஒன்று)** | 2 |
| 29 | வாக்கெடுப்பு<br>ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ ஒருவர் தனது விருப்பத்தை உரிய முறையில் பதிவு செய்வதை வாக்கெடுப்பு குறிக்கிறது. | 2 |
| 30 | • சொந்த சேமிப்பிலிருந்து<br>• நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடன் பெறுதல்<br>• வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று<br>• பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுதல் மூலம்<br>• சொத்துக்களை அடமானம் வைத்தல் மூலம்<br>**(ஏதேனும் இரண்டு)**<br>**மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் எழுதியிருந்தால் முழு மதிப்பெண் வழங்கவும்**<br>**.** | 2 |

## பகுதி – III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**
**வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 31 | டெய்லரின் மேலாண்மைத் தத்துவங்கள்<br>1. அறிவியல், கட்டை விரல் விதி அல்ல<br>2. இணக்கம், சச்சரவின்மை<br>3. மனப்புரட்சி<br>4. தனிமனிதத் தத்துவம் அல்ல, ஒத்துழைப்பு<br>5. ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |

| | | |
|---|---|---|
| 32 | வணிகர் இரசீதின் வகைகள்<br>1. பயன்பாட்டு இரசீதுகள்<br>2. தூய்மை  இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்<br>3. உள்நாடு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்<br>4. தனித்துவமான இரசீதுகள்<br>5. இருப்பிட இரசீதுகள்<br>(ஏதேனும் மூன்று தலைப்பு) | 3 |
| 33 | பங்குசந்தையின் குறைபாடுகள்<br>1. பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது<br>2. பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது<br>3. ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி<br>4. ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது,<br>5. பங்கு பரிவர்த்தனையின் விளிம்பு தேவைகள் அல்லது உற்பத்திச் சந்தைகளின் விஷயத்தில் வலியுறுத்துவதில்லை.<br>6. பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்குமறைகள் இல்லை<br>(ஏதேனும் மூன்று) | 3 |
| 34 | சாதாரண தீர்மானம்<br>1. நிறும பெயரைத் திருத்த<br>2. நிறும பங்கு முதலை மாற்றியமைக்க<br>3. கடனீட்டு பத்திரங்களை மீட்க<br>4. பங்காதயங்கள் அறிவிக்க<br>5. ஆண்டு இருப்பு நிலைக் குறிப்பை ஒப்புதல் வழங்க<br>6. இயக்குநர்களை பணியமர்த்தமற்றும் பிற<br>(ஏதேனும் மூன்று) | 3 |
| 35 | சந்தையிடுகையாளர்<br>1. தூண்டுபவர்<br>2. புதுமைபுகுத்துநர்<br>3. ஒருங்கிணைப்பாளர்<br>4. செயல்பாட்டாளர்<br>(ஏதேனும் மூன்று) | 3 |

| | | |
|---|---|---|
| 36 | **தேசிய ஆணையம்**<br>1. 5 உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பர்.<br>2. அவர்களில் ஒருவர் நீதி துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>3. ஏனைய நபர்கள் பிற துறைகளில் அறிவு, ஆற்றல், அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.<br>4. இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும். | 3 |
| 37 | **தாராளமயமாக்கல்**<br>தாராளமயமாக்கல் என்பது வணிக நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை அல்லது விதிகளை பொருளாதாரத்தில் சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.<br>**(வேறு தொடர்புடைய விளக்கத்திற்கு முழு மதிப்பெண் வழங்கவும்)** | 3 |
| 38 | **மாற்றுமுறை ஆவணம்**<br>1. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது.<br>2. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணத்தின் அனுமானமும் ஒப்புக் கொள்வதாகக் கருதப்படுகிறது.<br>3. அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது.<br>4. அது நியாயமான காலத்திற்குள் முதிர்வுக்கு முன்பாக ஏற்கப்பட்டதாக கருதப்படுகிறது.<br>5. மாற்றுமுறையாவணம் அதன் முதிர்வு தேதிக்கு முன்பே மாற்றப்பட்டதாக கொள்ளப்படுகிறது.<br>6. மாற்றுமுறையாவணம் காணாமல் போனாலும் முறைப்படி முத்திரை இடப்படுவதாக கருதப்படுகிறது.<br>7. மாற்றுமுறை ஆவணத்தை வைத்துக் கொண்டு இருப்பவர் முறைப்படி உடமை பெற்றவாக கருதப்படுகிறார்.<br>8. மாற்றமுறையாவணத்தில் காணப்படும் அந்த வரிசைப்படி மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதப்பட்டது எனக் கொக்கியிடப் பட வேண்டும்.<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |
| 39 | **மந்தமான தொழில் முனைவோர்**<br>1. மந்தமான தொழில் முனைவோர்களும் பழமைவாத தொழில் முனைவோருக்கு நிகரான மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.<br>2. இவர்கள் யாரும் நுழைய விரும்பாத அல்லது பெரிய நிறுமங்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிறிய சந்தையில் செயல்படுபவர்கள்.<br>3. சிறிய குட்டையில் பெரிய மீனாக அரசாள்பவர்கள் | 3 |

| | | |
|---|---|---|
| 40 | **பணியமர்த்தலின் முக்கியத்துவம்**<br>**1.** இது ஊழியர் ஒழுங்குணர்வை மேம்படுத்துகிறது.<br>**2.** பணியாளர் சுழற்சி குறைப்பதில் இது உதவுகிறது.<br>**3.** இது மோதல் விகிதங்கள் அல்லது விரும்பப்படாத நிகழ்வுகளை குறைக்க உதவுகிறது.<br>**4.** இது பணியாளர்களுக்கும் வேலைக்கும் இடையில் பொருத்தமற்றவைகளை தவிர்க்கிறது.<br>**5.** இது நிறுவனத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களின்படி வேலை செய்ய பணியாளர்களுக்கு உதவுகிறது.<br>**6.** இது ஒரு குறிப்பிட்ட தரவரிசை மற்றும் பொறுப்புகளை ஒரு தனிநபருக்கு ஒதுக்குவதாகும்.<br>**7.** குறுகிய கால ஊழியர்கள் பற்றாக்குறையைத் தவிர்க்க உதவுகிறது.<br>**(ஏதேனும் மூன்று)** | 3 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×5=35**

| | | |
|---|---|---|
| 41<br>(அ) | 1. வேலைப்பகிர்வு<br>2. அதிகாரமும் பொறுப்பும்<br>3. ஒழுங்குமுறை<br>4. கட்டளையொருமை<br>5. ஒரு முனை இயக்கம்<br>6. பொது நலனுக்காக தனிநலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்.<br>7. ஊதியம்<br>8. மையப்படுத்தலின் தரம்<br>9. ஆணையுரிமை வரிசை / தரவரிசைத் தொடர்<br>10. ஆணைகள்<br>11. நேர்மை நெறி<br>12. பணியாளர்களின் கால வரையறையின் நிலைத் தன்மை<br>13. தன் முயற்சித் திறன்<br>14. குழு பிணைப்புணர்ச்சி / குழு ஒற்றுமை<br>**(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| 41 (ஆ) | 1. நுகர்வோர் தனது பெயர், முகவரி, பொருள் வாங்கிய நாள் வாங்கிய பொருள் விவரம் குறித்து சட்டப்படி கொடுக்கப்பட வேண்டும்.<br>2. வாங்கிய பொருளில் உள்ள தரக்குறைப்பாடுகள் அல்லது அதிலிருந்து எழுந்த சிக்கல்களை தெளிவாக குறிப்பிட வேண்டும்.<br>3. புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை நிறுவனம் இந்நாள்வரை எடுத்த தீர்வு நடவடிக்கைகளை விவரிக்க வேண்டும்<br>4. சம்மந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் தீர்வு நடவடிக்கை<br>5. சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குறைகளை தீர்க்க அளிக்கப்பட்ட கால அவகாசம்<br>6. சட்டப்படி அளிக்கப்பட்ட அறிவிப்புக்கு சம்மந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை செய்த நிறுவனம் முறைப்படி பதிலளிக்கப்படாமல் இருக்கும் நிலையில் வருங்காலத்தில் எடுக்கப்பட இருக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்த தெளிவான நிலைப்பாடு புகார் மனுவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.<br>**(ஏதேனும் ஐந்து )**<br>**(சொந்த நடையில் எழுதியிருந்தாலும் முழு மதிப்பெண் வழங்கவும்)** | 5 |
| 42 (அ) | **நன்மைகள்–**<br>1. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு<br>2. அந்நியசெலாவணி இருப்பு அதிகரிப்பு<br>3. நுகர்வு அதிகரிப்பு<br>4. விலைகட்டுப்பாடு<br>5. வெளிநாட்டில் பெறும் கடன்களை குறைக்கிறது<br>**குறைபாடுகள்–**<br>1. வேலையின்மையை அதிகரித்தல்<br>2. உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு<br>3. அயல் நாடுகளை சார்ந்திருத்தலை பெருக்கும்<br>4. சமநிலையற்ற வளர்ச்சி<br>**(நன்மைகள் மற்றும் குறைபாடுகள் இணைந்து ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| 42<br>(ஆ) | 1. குறுகிய கால நிதிகள்<br>2. முதிர்வு காலம்<br>3. பணமாக மாற்றுவது<br>4. முறையான இடமில்லை<br>5. துணை சந்தைகள்<br>6. சந்தையின் பங்கு<br>7. மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வங்கி முறை<br>8. இரண்டாம் நிலை சந்தையின் தேவை<br>9. நிதித் தேவை மற்றும் வழங்கல்<br>10. மொத்த விற்பனைச் சந்தை<br>11. நெகிழ்வுத் தன்மை<br>12. மைய வங்கியின் முன்னிலை<br>**(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |
| 43<br>(அ) | **மனித வளங்களின் தனிப்பட்ட, குறிப்பிடத்தக்க மற்றும் வித்தியாசமான அம்சங்கள் பின்வருமாறு–**<br>1. உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.<br>2. பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.<br>3. பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர மனித வளம் என்பது பணியாளர் அல்ல.<br>4. மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.<br>5. மனித வளங்கள் தனியாக சிந்திக்கவும், செயல்படவும், பகுப்பாய்வு செய்யவும், மற்றும் விளக்கவும் முடியும்.<br>6. மனித வளங்கள் உணர்ச்சிபூர்வமானவை.<br>7. நிதியுடன் அல்லது நிதியில்லாமலும் மனித வளங்கள் ஊக்குவிக்கப்படலாம்.<br>8. மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்கமுடியாது.<br>9. மனித வளங்களால் உண்டாகும் மதிப்பு மற்றும் பாராட்டுகள் நீண்ட காலத்திற்கு கிடைக்கிறது.<br>10. மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது.<br>11. மனித வளமானது ஒரு குழுவாக செயல்படலாம்.<br>**(ஏதேனும் ஐந்து)** | 5 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| 43 (ஆ) | 1. முதன்மை நிர்வாக அதிகாரி<br>2. நிர்வாக இயக்குநர் அல்லது மேலாளர்<br>3. நிறுமத்தின் செயலாளர்<br>4. முழு நேர இயக்குநர்<br>5. முதன்மை நிதி அலுவலர் மற்றும்<br>6. அத்தகைய மற்ற அலுவலர்கள் பரிந்துரைக்கப்படலாம்.<br>**(ஏதேனும் ஐந்து)** | 5 |
| 44 (அ) | 1. பண்டமாற்று முறை<br>2. உற்பத்தி சார்ந்தது<br>3. விற்பனை சார்ந்தது<br>4. சந்தையிடுகை சார்ந்தது<br>5. நுகர்வோர் சார்ந்தது<br>6. மேலாண்மை சார்ந்தது **(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |
| | **(அல்லது)** | |
| 44 (ஆ) | 1. ஆவணத்தின் முகப்பில் மேலெழுத வேண்டும். மையில் எழுதுவதே நல்லது. பென்சிலால் அதை அழித்துத் திருத்த ஏதுவாகும். இதனால் மோசடி ஏதும் நடைபெறலாம்.<br>2. மெலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுவது போன்றே மேலெழுத வேண்டும். உதாரணமாக 'திரு', 'அவர்கள்' போன்ற மரியாதை மொழிகளை சேர்க்க கூடாது.<br>3. மேலெழுத்தில் பெயர் எழுதப்பட்டபடியேதான் கையொப்பமும் இருக்க வேண்டும். பெயர் தவறாக எழுதியிருப்பின், கையெழுத்தும் அத்தவறான எழுத்துக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.<br>(உ.ம்) எழுதப்பட்டது ராமசாமி சரியான முறை இராமசாமி இருப்பினும், ராமசாமி என்றே கையெழுத்திட வேண்டும்.<br>4. ஆவணத்தின் முழுமதிப்பிற்கும் மேலெழுதப்படல் வேண்டும். மதிப்பின் ஒரு பகுதிக்கு மேலெழுத்து செய்யப்பட்டிருப்பின் அது செல்லாது. ஆனால் ஆவணத்தின் தொகையில் ஒரு பகுதி முன்பே செலுத்தப்பட்டு இருப்பின், எஞ்சிய தொகைக்கு மேலெழுத்திடலாம்.<br>5. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறல் வேண்டும். உறுதி கூறுபவர் முழு முகவரியைத் தெரிவித்தல் அவசியம்.<br>6. மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால் ஒரு சிறு ஒட்டுத்தாளை ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.<br>7. மேலெழுத்து ஆவணத்தில் உள்ள வரிசைப்படி மேலெழுதப்பட்டதாக கருதப்படுகிறது.<br>8. பெரிய எழுத்தில் கையொப்பம் இடுவது முறையான மேலெழுத்து ஆகாது. | 5 |

| | | |
|---|---|---|
| | 9. பணம் செலுத்துபவர்கள் பெயர்களில் சேர்க்கப்படும் முற்சேர்க்கை அல்லது பிற்சேர்க்கை ஒப்புதலில் தவிர்க்கப்பட வேண்டும்.<br>10. மேலெழுதுதல் மையினால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.<br>11. பணம் செலுத்துபவர் ஒரு படிப்பறிவற்ற நபராக இருந்தால், அவர் செலுத்தும் காசோலையில் அல்லது மேலெழுதலில் தனது கட்டை விரல் ரேகையினை இணைப்பதன் மூலம் அவர் அதை அங்கீகரிக்க முடியும். ஆனால் யாரேனும் ஒருவர் தனது முழு முகவரியையும் கொடுத்து அதனை உறுதிப்படுத்த வேண்டும்.<br>12. ஒரு காசோலை அல்லது மேலெழுதுதலுக்கு ஒப்புதல் அளிக்க முறையாக அங்கீகாரம் பெற்ற ஒருவர்,"சார்பாக" அல்லது "பதிலாக" போன்ற சொற்களைப் பயன்படுத்தி கையெழுத்திட வேண்டும்.<br>**(ஏதேனும் ஐந்து)** | |
| 45 (அ) | ▪ கடன் சந்தை<br>▪ நேர்மை பங்குச் சந்தை<br>▪ பணச் சந்தை<br>▪ மூலதனச் சந்தை<br>▪ முதல் நிலைச் சந்தை<br>▪ இரண்டாம் நிலைச் சந்தை<br>▪ ரொக்கம் (அ) உடனடிச் சந்தை<br>▪ முன்னோக்கிய (அ) எதிர்கால சந்தை<br>▪ பரிமாற்றக வர்த்தகச் சந்தை<br>▪ எதிர்காலச் சந்தை<br>**(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |
| | **(அல்லது)** | |
| 45 (ஆ) | 1. திறன் தேர்வு<br>• உளவியல் தேர்வு<br>• சாதனை ஆய்வுத் தேர்வு (அ) அடைவுத் தேர்வு<br>• நுண்ணறிவுத் திறன் தேர்வு<br>• முடிவெடுக்கும் திறன் ஆய்வுத் தேர்வு<br>2. ஆளுமை ஆய்வுத் தேர்வு<br>• ஆர்வ ஆய்வுத் தேர்வு<br>• ஆளுமைத்திறன் ஆய்வுத் தேர்வு<br>• செயல் திறன் ஆய்வுத் தேர்வு<br>• உளவியல் ஆய்வுத் தேர்வு<br>**(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்.)** | 5 |

| | | |
|---|---|---|
| 46 (அ) | 1. ஸ்டார்ட் அப் இந்தியா<br>2. இந்தியாவில் தயாரிப்பு திட்டம்<br>3. அடல் புதுமை புகுத்தல் திட்டம்<br>4. பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு<br>5. ஜன்தன்–ஆதார்–மொபைல்<br>6. இலக்குமுறை இந்தியா (அ) டிஜிட்டல் இந்தியா<br>7. ஸ்டாண்ட் அப் இந்தியா<br>8. வணிகம்சார்ந்த தொழில் முறை உதவி மற்றும் வளர்ச்சி திட்டம்<br>9. பிரதான் மந்திரி குஷால் விகாஸ் திட்டம்<br>10. தேசிய திறன் அபிவிருத்தி குறிக்கோள்<br>11. விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி<br>**(பிற குறிப்பிட்ட தொழில் முனைவு திட்டங்கள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)**<br>**(ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)**<br>**(தலைப்புகள் மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கவும்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 46 (ஆ) | 1. இது மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.<br>2. இது முக்கிய பிரச்சனைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.<br>3. இது அதிகாரப் பகிர்வினை எளிமையாக்குகிறது.<br>4. இது முக்கியமல்லாத தகவலில் இருந்து முக்கியமான தகவலைப் பிரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும்.<br>5. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் வாய்ப்புகளையும், அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க இது உதவுகிறது.<br>6. விதிவிலக்கு மேலாண்மை முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது. | 5 |

| | | |
|---|---|---|
| 47<br>(அ) | **தேசிய பங்கு சந்தை (NSE)**<br>1. தேசிய பங்குச்சந்தை நவம்பர் 1992 இல் அமைக்கப்பட்டது. தேசிய அளவில் திரை சார்ந்து இணைய வழியாக ஆணை பெறும் வியாபார அமைப்பாகும்.<br>2. அமைப்பு செயற்கைகோள் இணைப்பு மூலம் நாடு முழுவதும் பரவியுள்ள உறுப்பினர்களிடையே வியாபாரம் செய்கிறது.<br>3. இந்தியாவில் கணினி தகவல் தொடர்பின் மூலம் பங்குகளை பரிந்துரைக்கப்பட்ட விலையில் கொள்முதல் மற்றும் விற்பனை செய்வதற்கான உறுப்பினரின் ஆணைகள் மத்திய கணினி மூலம் ஒருவருக்கொருவர் மற்றும் உடனடியாக வர்த்தக உறுப்பினர் தொடர்பை ஏற்படுத்துகிறது.<br>4. தேசிய பங்குச் சந்தை இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதாவது, கடன் பிரிவு மற்றும் மூலதன பிரிவு.<br>5. இது இந்தியாவில் பங்கு வர்த்தக புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.<br><br>**தேசிய பத்திர வைப்பகங்கள் வரையறுக்கப்பட்டது (NSDL)**<br>1. இந்தியாவில் 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வைப்புச் சட்டத்தை இயற்றி இந்த அமைப்பை தோற்றுவித்தது.<br>2. நவீன காலத்திற்கேற்றவாறு காகிதமில்லாமல் பத்திரங்கள் தீர்வை செய்வதன் மூலம் புதிய சகாப்தத்தை தோற்றுவித்துள்ளது.<br>3. 1996ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள் இந்தியாவில் தேசிய பத்திர வைப்பகங்கள் அமைப்பு தொடங்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் நாள் காகிதமில்லா பத்திரங்கள் விற்பனையை தேசிய பங்கு பரிமாற்றகம் தொடங்கியது.<br>4. 1997ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் நாள் முதல் காகிதமில்லா பங்கு பரிவர்த்தனையை பம்பாய் பங்குச் சந்தை தொடங்கியது.<br>**( (NSE) மற்றும் (NSDL) இணைந்து ஏதேனும் ஐந்து )**<br>**(வேறு தொடர்புடைய விளக்கத்திற்கு மதிப்பெண் வழங்கவும்)** | 5 |
| | **(அல்லது)** | |
| 47<br>(ஆ) | 1. புதுமை படைத்தல்<br>2. நாட்டின் மொத்த பொருள் உற்பத்திக்கு பங்களித்தல்<br>3. சீரான வட்டார வளர்ச்சி<br>4. ஏற்றுமதி முன்னேற்றம்<br>5. உள்ளார்ந்த வளப் பயன்பாடு<br>6. பொருளாதார சக்தி குவிதலை தவிர்த்தல்<br>7. வாழ்க்கைத்தர உயர்ச்சி<br>**(ஏதேனும் ஐந்து சிறு விளக்கத்துடன்)** | 5 |